**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 125** **நாள் : 09.06.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்காக்களுக்கு நெகிழிக் குப்பைகளிலிருந்து மறுசுழற்சி செய்து தயாரிக்கப்பட்ட பூங்கா இருக்கைகளை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்களிடம் தமிழ்நாடு பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் இன்று வழங்கினார்கள்.**

இன்று (09.06.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்களிடம், தமிழ்நாடு பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் நெகிழிக் குப்பைகளிலிருந்து மறுசுழற்சி செய்து தயாரிக்கப்பட்ட 100 பூங்கா இருக்கைகளை பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்காக்களுக்கு வழங்குவதன் அடையாளமாக 42 இருக்கைகளை இச்சங்கத்தின் நிர்வாகிகள் ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

தமிழ்நாடு பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்கம் பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்காவின் பயன்பாட்டிற்காக முதறகட்டமாக 100 இருக்கைகள் வழங்கப்பட்டது. மேலும், தேவைப்படும் பூங்காக்களுக்கான இருக்கைகள் இச்சங்கத்தின் சார்பில் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தமிழ்நாடு பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் திரு. பாபு ஸ்ரீனிவாசன், திரு.பி.சுவாமிநாதன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**